DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 898/2024**

**Deposition of LW2 examined as PW 2** Dt. 12.08.2025

| | |
|---|---|
| Name | ரகுபதி |
| Father's/Husband's Name | ராமகிருஷ்ணன் |
| Village | புழுதிக்குடி |
| Taluk | |
| Age | 29/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 12.08.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது நண்பர் ஆவார். அ.சா.1 விவேக் நச்சினார்குடி அருகில் நிலத்தில் அடகு பிடித்து விவசாயம் செய்து வருகிறார். அந்த நிலத்திற்கு விவசாய பணிகளுக்காக என்னை உதவிக்கு அழைப்பார். நானும் செல்வது வழக்கம். அவ்வாறு கடந்த 27.03.2024 ம் தேதி சரியாக இரவு 09.00 மணியளவில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அ.சா.1 னுடன் மேற்படி வயலுக்கு சென்றபோது மின்சாரம் இல்லாததால் காத்துக்கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் டிராக்டர் ஒன்று வந்து நிலத்தில் உள்ள பயிர்களை சேதப்படுத்தியது. நாங்கள் சென்று ஏன் நிலத்தில் உள்ள பயிரிகளில் சேதப்படுத்தீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் இருவரும் தகாத வார்த்தைகளால் குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று திட்டி இந்த பக்கம் வந்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். நாங்கள் பயந்து கொண்டு உடனடியாக பாலையூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பயிர்களின் சேதம் மதிப்பு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை இருக்கும். அவை மகசூல் செய்யப்பட்டு இருப்பின் ரூ.3,00,000/- வரை லாபம் கிடைத்து இருக்கும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

**இல்லை**

R. Ragupathi

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

12/8/25

நீதித்துறை நடுவர் எண்-II

மயிலாடுதுறை